

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (10.07.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மாவட்ட நிலை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் திருமதி த.ரத்னா, தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் நிர்வாக இயக்குநர் முனைவர் ச.விசாகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு, கூடுதல் மருத்துவமனை கட்டிடப் பணிக்கு அடிக்கல் நாட்டி, மாணிக்கம்பாளையம் அரசு துணை செவிலியர் பயிற்சிப்பள்ளி மாணவியர் விடுதி கூடுதல் கட்டிடத்தையும் திறந்து வைத்தார். இவ்விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், திருசெங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### வாஷிங்டன் சிவா - நியுசெர்சி பாலா வரவேற்புரை!

# அமெரிக்காவில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிகழ்வு!

## கவிஞர் இமயம் - புகழ்காந்தி - மருத்துவர் சோம இளங்கோவன் பங்கேற்பு!

வாஷிங்டன், ஜூலை 12 -

அமெரிக்காவில் தி.மு.க., கலைஞர் அறக்கட்டளை மற்றும் அமெரிக்க தமிழர்கள் இணைந்து நடத்திய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் “கலைஞர் நூற்றாண்டு நிகழ்வு” சீரும் சிறப்புமாக நடைப்பெற்றது.

தலைமை ஒருங்கிணைப்பாளர் வாசிங்டன் சிவா அனைவரையும் வரவேற்று பேசினார். அதனை தொடர்ந்து துனை ஒருங்கிணைப்பாளர் நியுசெர்சி பாலா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கவிதையால் வாழ்த்தி அனைத்து பேச்சாளர்களையும் வரவேற்று ஒவ்வொரு நபராக பேச அழைத்தார்.பெரியார் பன்னாட்டு மையத்தின் தலைவர் மருத்துவர் சோம. இளங்கோவன் நிகழ்வை துவக்கி வைத்து பேசினார்.

அமெரிக்காவிலிருந்து வாசிங்டன், நியுசெர்சி, டெலவேர், ப்ளோரிடா, டெக்சாஸ், டென்னிசி, மேரிலாந்து, கலிபோர்னியா,மிச்சிகன்,சியாட்டல்,ஒக்லஹோமா,கரோலினா ஆகிய 12 மாநிலங்களைச் சேர்ந்த தமிழர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை பற்றி பேசினர்.

இந்த நிகழ்வில் தமிழ்நாட்டில் இருந்து கவிஞர் இமயம், அயலக அணி உறுப்பினர் புகழ்காந்தி, அமெரிக்கத் தமிழ் கல்வி கழகத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் முனைவர் அரசு செல்லையா, டென்னிசி மாநிலத்தை சேர்ந்த முன்னாள் பேராசிரியர் முனைவர் சுந்தரமூர்த்தி, மிசிக்கன் பல்கலைகழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் முனைவர் இராம் மகாலிங்கம், வடகரோலினாவை சேர்ந்த மருத்துவர் சரோஜா அம்மாள், விர்ஜினியாவை சேர்ந்த கவிஞர் கனிமொழி, சியாட்டலை சேர்ந்த அருள்மொழி, கலிப்போர்னியாவை சேர்ந்த டெய்சி, ப்ளோரிடா கோபிநாத் ராமசாமி,டாலஸ் சக்தி,பாண்டிமதி,சரவணக்குமார்,

இராம்குமார், நியுஜெர்ஸி மாநிலத்தை சேர்ந்த திணை ரவி, ராஜன், கோசல், பிரசாத் பாண்டியன் என பல்வேறு அமெரிக்கத் தமிழர்களும் பங்கு கொண்டு இணைய நிகழ்வை மிக சிறப்பாக நடத்தினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் செய்த அரும் பெரும் சாதனைகளை கவிஞர் இமயம் எடுத்துரைத்தார். கலைஞர் தனக்கு கிடைத்த அங்கீகாரத்தின் பல்வேறு சட்டங்களை எப்படி இயற்றினார் எனவும், தமிழ் நாட்டில் கடைக்கோடி மக்களும் பயன் அடையும் வகையில் ரேஷன் கடை மூலம் அரிசி வழங்கி பசியை போக்கியதில் ஆரம்பித்து, கல்வியில், சாலை வசதியில், சொத்தில் சமபங்கு, வேலை வாய்ப்பு என தமிழ் சமூகம் மேம்பட வாழ்நாள் இறுதி வரை பேராடியவர் எனவும் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் எண்ணற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் டைடல் பார்க் மூலம் நடந்த கணனி புரட்சி, சாலை வசதிகள், பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் வருகை, அனைத்துத் சாதியினரும் அர்ச்சகர் ஆன திட்டம், மொழிக்கும், இனத்திற்கும் முன் உரிமை என அமெரிக்கா, வியட்நாம், சௌதி அரேபியா, கத்தார், ஓமன், தமிழ்நாடு என பல்வேறு தேசங்களில் இருந்து கலந்துகொண்டு கலைஞர் நூற்றாண்டில் கலைஞரின் சாதனைகள் குறித்து உரையாற்றினார்கள்.

நிகழ்வின் இறுதியில் கலைஞர் என்ற மாபெரும் ஆளுமைக்கு நியுசெர்சி மாநிலம் எடிசன் நகரின் ஜனநாயக கட்சி தலைவர் மகேஷ் பாக்யா அவர்கள் கலைஞருக்கு மரியாதை செலுத்தும் விதமாக “Certificate of Proclamation” அளித்தது வாசிக்கப்பட்டது.

துணை ஒருங்கிணைப்பாளர் நியுசெர்சி பாலா அவர்கள் ஜனநாயக கட்சி தலைவரைச் சந்தித்து அதனை பெற்றுக் கொண்டு, அதனை நிகழ்சியில் படித்து காண்பித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசியல், சமுதாய பணி, தமிழ் மொழிக்கான வளர்ச்சி, தமிழ் இனத்திற்காக நீண்ட பெருகாலம் சேவை செய்ததை பாராட்டி அந்த பிரகடனம் பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் கலைஞர் 100 நூற்றாண்டு நிகழ்வில், அதன் துணை ஒருங்கிணைப்பாளர் டெக்ஸாஸ் பாண்டிமதி துரைராஜ் எல்லோருக்கும் நன்றி கூறி பாராட்டினார்.

# அரசின் வருமானத்திற்காக மது விற்கவில்லை!

## அமைச்சர் முத்துசாமி பேட்டி!



சென்னை, ஜூலை 12 -

அரசின் வருமானத்திற்காக மது விற்கவில்லை என்று அமைச்சர் முத்துசாமி கூறினார். சென்னை தலைமைச் செயலகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி தலைமையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மாவட்ட நிலை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உள்துறை முதன்மைச் செயலாளர் அமுதா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ரத்னா, தமிழ்நாடு மாநில வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் விசாகன் ஆகியோர் பங்கேற்றனர்.

**பாதுகாப்பு**

பின்னர் அமைச்சர் முத்துசாமி அளித்த பேட்டி வருமாறு:

டாஸ்மாக் கடைகளுக்கும், கடையில் வசூலான பணத்தை செலுத்தும் ஊழியருக்கும் பாதுகாப்பு தேவை. வங்கி ஊழியரே கடைக்கு சென்று பணத்தை பெற்றுக்கொள்ளலாமா? என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம். சென்னையில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் அது செயல்படுத்தப்படும்.

**வருமானத்திற்கு அல்ல**

மது விற்பனை செய்வது வருமானத்திற்கான நோக்கமல்ல. விற்பனையில் இலக்கு நிர்ணயிக்கப்படுவது, வருமானத்தை கூட்டுவதற்காக அல்ல. மது விற்பனை குறைந்தால் அதற்கு காரணம் என்ன? மது குடிப்பதை யாரும் நிறுத்தி இருக்கிறார்களா? அல்லது, மாற்றாக வேறு தவறான இடத்திற்கு செல்கிறார்களா? என்பதை கண்டறியவே இலக்கு நிர்ண யிக்கப்படுகிறது.

டாஸ்மாக் பாட்டில்களால் பல பிரச்சினைகள் உள்ளன. கண்ட இடங்களிலும் அவை வீசப்பட்டு விடுகின்றன. எனவே மது பாட்டிலுக்கு பதிலாக ‘டெட்ரா பாக்கெட்’ வர வேண்டும் என்று பல தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர். குறுகிய இடத்தில் அவற்றை வைக்கலாம். அவற்றை கையாள்வது எளிது. அதோடு உடைந்து நஷ்டம் ஏற்படுவது இருக்காது. எனவே அதனடிப்படையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. டெட்ரா பேக் மூலம் விற்பனை செய்து, அதை மறு சுழற்சியாக மீண்டும் பயன்படுத்தலாம்.

**கடை திறக்கும் நேரம்**

அதுபோல கடை திறக்கும் காலநேரம் பற்றி ஆய்வு செய்தபோது, காலை 7 மணியில் இருந்து 9 மணி வரை கட்டிட வேலை போன்ற கடுமையான உடலுழைப்பு வேலைக்கு செல்பவர்கள் மது கிடைக்காமல் சிரமம் அடைகிறார்கள் என்று கண்டறிந்தோம். அவர்களுக்காக என்ன ஏற்பாட்டை செய்யலாம்? என்பதில் இன்னும் முடிவெடுக்கவில்லை.

**கள் விற்பனை வருமா?**

உடலுக்கு நன்மை தரும் கள்ளை விற்பனை செய்வது பற்றி கேட்டால், விவசாயிகளை மனதில் வைத்து அதை செய்யலாம் என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுகிறது என்பது மிக அருமையான விஷயம். விவசாயிகளின் நன்மை என்பதில் முதல் அமைச்சருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் கள் விற்பனையில் ஈடுபட்ட மாநிலங்களில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அங்கு நடக்கும் தவறுகள் இங்கு வந்துவிடக் கூடாது என்பதையும் பார்க்க வேண்டியதுள்ளது. இது பற்றி ஆய்வு செய்ய தனி கமிட்டியை நியமிக்க இருக்கிறோம். அதை ஒழுங்கு செய்த பிறகுதான் கள் விற்பனை பற்றி யோசிக்க முடியும். அந்த ஆய்வில், அந்த தவறுகளை கட்டுப்படுத்திவிட முடியும் என்று சொன்னால் அது பற்றி சிந்திப்போம். முதலில் ஆய்வறிக்கை வரட்டும். எம்.ஆர்.பி. விலைக்கு கூடுதலான விலைக்கு மது விற்பனை செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உயர் அதிகாரிகளுக்கு அதுபற்றி வந்த தகவல் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் மிகச்சில புகார்கள்தான் வந்தன.

இவ்வாறு அவர் கூறினார்.

### மாநகர் மாவட்டம் – கோவை தெற்கு தொகுதி சார்பில்

# கோவையில் 5000 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, ஜூலை 12 -

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு,கோவை மாநகர் மாவட்டக் கழகம் மற்றும் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில், இன்று (12.07.2023 - புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில், ராஜ வீதி தேர்நிலைத் திடலில், 5000 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

இது குறித்து கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர், செம்மொழிக் காவலர் ஐந்து முறை முதலமைச்சராக இருந்து 19 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர். 13 முறை சட்டமன்ற உறுப்பினராக 60 ஆண்டுகள் சட்டமன்றத்தில் இருந்து, இன்று நாம் காணும் நவீன தமிழகத்தை உருவாக்கிய சிற்பி, ஒய்வறியா போராளி , தமிழினக் காவலர் , சமூக நீதிப் போராளி , தன்னிகரற்ற தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டக் கழகம் மற்றும் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில், இன்று ( 12.07.2023) மாலை 5.00 மணியளவில், ராஜவீதி தேர்நிலைத் திடலில், 5000 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது.

அது சமயம்,கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மேயர், பொதுக்குழு உறுப்பினர்கள் , பகுதிக்கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள் , நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று, கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தஞ்சை கூத்தரசன் தலைமையில்

# “கலைஞர் நூறு” எனும் தலைப்பில் மாம்பலம் சந்திரசேகர் பேசுகிறார்!

## சென்னை பெரியார் திடலில் நாளை நடக்கிறது!

சென்னை, ஜூலை 12 -

இது குறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத் தலைவர் வழக்கறிஞர் திருமதி ஆ.வீரமர்த்தினி தன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சுழல்கின்ற பூமிப் பந்தில் ஆகச் சிறந்த அற்புதப் பகுத்தறிவுப் பேராசான் தந்தை பெரியாரின் அறிவுப் பாசறை திராவிடர் கழகத்தின் சேய் அமைப்பான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், நாளை ( 13.7.2023 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை - 7, தந்தை பெரியார் திடலிலுள்ள அன்னை திருமதி.ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

அந்நிகழ்ச்சியில் நான் ( ஆ. வீரமர்த்தினி ) வரவேற்றுப் பேசுகிறேன். தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை. கூத்தரசன் தலைமை தாங்குகிறார். தென்மேற்கு சென்னை மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் “கலைஞர் நூறு” எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கு அத்திப்பட்டு சாம்ராஜ், த.ஆதித்தன், ஆவடி பாஸ்கர், பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென்.மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்த்தனம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். எனவே இந்நிகழ்ச்சிக்கு அனைவரும் அணி திரண்டு வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், உதகை தமிழக அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்கள், சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆகிய துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மேற்கொண்டார்.

### இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட

# சிந்தாதிரிப்பேட்டையில் - நவீன மீன் அங்காடி கட்டடம் கட்டும் பணி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 12-

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு62க்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டையில் சிங்கார சென்னை 2.0 மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் 102 கடைகளுடன் புதிதாக நவீன மீன் அங்காடி கட்டடம் கட்டும் பணியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.07.2023) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்த நவீன மீன் அங்காடி கட்டுவதற்கான திட்ட வரைபடத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு இப்பணிகளை குறித்த காலத்தில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இராயபுரம் மண்டலம், வார்டு62க்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டையில் சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் 1,247 ச.மீ. பரப்பளவுள்ள இடத்தில் 1,022 ச.மீ. பரப்பளவில் 102 கடைகளுடன் கூடிய நவீன மீன் அங்காடி கட்டடமானது கட்டப்பட உள்ளது. இந்தக் கட்டடமானது, புயலினால் சேதமடையாமல் இருக்கும் வகையில் டென்சைல் கட்டுமானத்துடன் கூடிய மேற்கூரை, மீன் கழிவுகளை வெளியேற்றும் வகையில் சுத்திகரிப்பு நிலையம், குப்பைகளை எளிதாக அகற்றுவதற்கான அமைப்புகள் மற்றும் வழிகாட்டி பலகைகள், மீன் கழிவுநீரினை பயோ டைஜிஸ்ட்க்கு கொண்டு செல்ல பிரத்யேக வடிகால் மற்றும் வாகன நிறுத்தம் போன்ற அம்சங்களுடன் அமைக்கப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு115க்குட்பட்ட பீட்டர்ஸ் சாலையில் ரூ.2.89 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த மழைநீர் வடிகாலானது பீட்டர்ஸ் சாலையில் நியூ காலேஜ் பகுதியிலிருந்து கான்ரான்ஸ்மித் சாலை வரை, மோனகன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலிருந்து கான்ரான்ஸ்மித் சாலை வரை 696 மீ. நீளத்திலும், ஆர்.ஓ.பி. 6வது தெருவில் 113 மீ. நீளத்திலும் அமைக்கப்பட்டு வரும் விவரத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து, இப்பணிகளை தரமாகவும், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.சிவ குரு பிரபாகரன், (வடக்கு), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (தெற்கு), நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர்கள் ரா.ஜெகதீசன் மற்றும் திருமதி வெ.ஈஸ்வரி வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் ரெட்டணை அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற குழந்தை தொழிலாளர் ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குருபூஜை விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்ற தலைவர் தமிழ்செல்வி பிரபு மற்றும் பலர் உடனிருந்தனர்.